பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 08 2026 FRIDAY 6.30 PM**

<u>**மாநிலச்செய்திகள்**</u>

<u>**தலைப்புச் செய்திகள்**</u>

1) மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 11 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

3) கரூர் கூட்டநெரிசலில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கப்பட்டதை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

4) மகளிர் பாதுகாப்பை உறுதி செய்ய தவெக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5) கொரியா சர்வதேச இளையோர் வில்வித்தை போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் -

<<<<<<>>>>>>

மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 11 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

கடந்த நிதியாண்டில் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 4 லட்சத்து 24 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துறையில் மகளிர் பங்களிப்பு 30 சதவீதமாக உள்ளது என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

ஜவுளித்றையின் வளர்ச்சிக்காக புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கரூர் கூட்டநெரிசல் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கப்பட்டதை ரத்து செய்த சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை பிறப்பித்த உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு **J B Pardiwala,** திரு வினோத் சந்திரன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

<<<<<<>>>>>>

அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த படிப்பும் வழங்கப்பட உள்ளதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு முகமது ஃபர்வேஸ் கூறியுள்ளார்.

நடப்பு கல்வியாண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான வகுப்புகளை இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

***(Sound Byte — முகமது ஃபர்வேஸ் - 35 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக திமுக குறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் என யாருக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் கொலை சம்பவங்கள் நடைபெறுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தவெக கட்சியில் உள்ள பெண்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

மகளிர் பாதுகாப்பை உறுதி செய்ய தவெக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கிருஷ்ணகிரியில் எட்டு வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய உரிய நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கோரியுள்ளது.

<<<<<<>>>>>>

தாமிரபரணி ஆற்றை மேம்படுத்துவதற்கான நிதியை அந்த ஆற்றின் கரைகளை அழகுபடுத்துவதற்காக பயன்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்றும் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராதமாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்திற்காக ஜெர்மனி வங்கியிடமிருந்து கடனாக பெறப்பட்ட 59 கோடி ரூபாயை கரையை பலப்படுத்துவதற்காக செலவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசின் இந்த அணுகுமுறை தவறானது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றுவோம் இயக்கத்தின்கீழ், சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் **80** அடி நீள தேசியக்கொடியுடன் நூற்றுக்கணக்கான மாணவிகள் பங்கேற்ற பேரணி இன்று நடைபெற்றது.

இப்பேரணி பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜயகுமார் - 43 Sec. )***

இதேபோல், தூத்துக்குடியில் ஆயிரம் அடி நீள தேசியக்கொடியை ஆயிரம் மாணவர்கள் ஏந்தியபடி தேசப்பற்று விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — லஷ்மணன் - 37 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 46 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ராமாபுரம் — மணப்பாக்கம் பகுதியில் செயல்பட்டுவரும் அமுதம் பல்பொருள் அங்காடியில் மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

சேலம் மேட்டூர் அணையில் அணை பாதுகாப்பு மதிப்பீடு குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

---------------

விழுப்புரம் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று வழங்கினார்.

-----------------

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு இயக்க நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

------------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

----------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கடற்பகுதியில் அலையில் சிக்கி போராடிய 14 வயது சிறுவன் பாதுகாப்பாக மீட்கப்பட்டான்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச இளையோர் வில்வித்தை போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் குழு பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா — கொரியாவை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

மகளிர் தனிநபர் பிரிவில் **Aditi Swami** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--------------

காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

நைஜீரியாவின் **Lagos**-ல் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா **13** தங்கம் உட்பட **35** பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

--------------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் கபடி பிரிவு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா முதல் போட்டியில் ஆடவர் பிரிவில் ஜப்பானையும், மகளிர் பிரிவில் பங்களாதேஷையும் அடுத்த மாதம் **21-**ஆம் தேதி எதிர்கொள்கிறது.

-------------

**Sinquefield** கோப்பை செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் **Praggnanandhaa** இரண்டாவது இடத்தில் உள்ளார்.

-----------------

தாஸ்கண்டில் நடைபெற்ற ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், ஒரு தங்கம், ஏழு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப்பட்டியலில் எட்டாவது இடத்தை பிடித்தது.

**<<<<<<END>>>>>>**